## UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 300 මට්ටම - 2021
கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 300 வது தேர்ச்சி மட்டம் – 2021
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level –2021**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය-පරීක්ෂණය 300 මට්ටම - පෙබරවාරි 2022**
**கலைத்தேர்வுப் பரீட்சை) வெளிவாரி - புதிய பாடத்திட்டம் (300 வது தேர்ச்சி மட்டம் – பெப்ரவரி 2022**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level – February - 2022**

### SUPE 310: Project Formulation and Evaluation

කාලය පැය (03) තුනයි.
மூன்று) 03) மணித்தியாலங்கள்
Time: three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න **05** කට පිළිතුරු සපයන්න.
05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
Answer 05 questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 06 කි
இந்த வினாப்பத்திரத்தில் 06 னாக்கள் உள்ளன.
There are 06 questions in the question paper.

---

1 a) செயற்றிட்ட அடையாளப்படுத்தல் செயல்முறையில் செயற்றிட்ட கருத்துக்கள்/எண்ணக்கருக்களின் பல்வேறு மூலாதாரங்களை மையமாகக் கொண்டு தேசிய மட்டத்திலான முதலீட்டுத் திட்டத்தின் செயற்றிட்ட எண்ணக்கருவினை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை விளக்குக. (07 புள்ளிகள்)

b) "இலங்கையின் தற்போதைய அரசாங்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடு கொள்கைகளுடன் உள்நாட்டு விவசாயம் மற்றும் கைத்தொழில் தொடர்பான வியாபாரத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் தன்னிறைவு மற்றும் ஏற்றுமதி மையப்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருளாதார மாதிரியை நோக்கி நகர்கிறது." நீர் செயற்றிட்ட வடிவமைப்பாளராக இருந்தால், உமது செயற்றிட்டத்தை வடிவமைக்க பல்வேறு செயற்றிட்ட அடையாளப்படுத்தல் அணுகுமுறைகளை எவ்வாறு பயன்படுத்துவீர் மற்றும் உமது திட்டமிடல் செயல்முறையின் போது எந்தெந்த பகுதிகளுக்கு முன்னுரிமை அளிப்பீர்? பொருளாதாரத்தில் கொவிட்-19 பெருந்தொற்றினால் ஏற்படும் மூலதன உருவாக்கத்தின் பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு உமது விடையினை விளக்குக. (13 புள்ளிகள்)

2. பேராதனை நகரப் பகுதிக்கு அண்மித்த மகாவலி ஆற்று நீர் மாசுபடுத்தப்படுவது மத்திய மாகாண சபையினால் பாரிய சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினையாகக் கருதப்படுகிறது. இந்த ஆற்று நீர் மாசு பிரச்சினையை சமாளிக்கும் வகையில் ஒரு செயற்றிட்டத்தை வடிவமைக்க மாகாண சபை தீர்மானித்துள்ளது. இதற்கான செயற்றிட்ட வடிவமைப்பைத் தயாரிப்பதற்கான பணி உமக்கு வழங்கப்பட்டுள்ளது

எனக் கருதி பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துக.

a) மேற்கூறப்பட்ட பிரச்சினைக்கான பிரச்சினை மரம் மற்றும் நோக்க மரத்தை அதன் கூறுகள் மற்றும் அவற்றுக்கிடையேயான தொடர்புகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு பெறுக.. (10 புள்ளிகள்)

b) மேலே உள்ள பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கு ஆகக் குறைந்தது மூன்று மாற்று தந்திரோபாயங்களை வழங்குவதுடன் மற்றும் ஒவ்வொரு தந்திரோபாயத்தையும் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

c) இந்த செயற்றிட்டத்தின் மீது ஆர்வமுள்ள பங்குதாரர்களின் வெவ்வேறு வகைகளைக் கண்டறிந்து, அவர்களின் வகிபாகம், தாக்கம் மற்றும் தலையீட்டு இயலுமை ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் பங்குதாரர் பகுப்பாய்வு அட்டவணையை வடிவமைக்குக. (04 புள்ளிகள்)

3. a) தர்க்கச் சட்டக செயன்முறையின் ஒவ்வொரு துணை பகுப்பாய்விலும் கவனம் செலுத்தும் அனைத்து படிமுறைகள் தொடர்பாக விரிவான விளக்கங்களை பட்டியலிட்டு வழங்கவும். (08 புள்ளிகள்)

b) வினா இலக்கம். 2 இல் கொடுக்கப்பட்டுள்ள பிரச்சினைக்கான விரிவான தர்க்கச் சட்டகத் தாயத்தை உருவாக்கி, அதன் ஒவ்வொரு கூறுகளையும் குறிப்பிடுக (அபிவிருத்தி நோக்கம், செயற்றிட்ட நோக்கம், வெளியீடுகள், செயற்பாடுகள், உள்ளீடுகள், சரிபார்க்கக்கூடிய குறிகாட்டிகள், தகவல்களுக்கான மூலங்கள் மற்றும் தொடர்புடைய இடர் மற்றும் எடுகோள்கள்). (12 புள்ளிகள்)

4. a) ஒரு முதலீட்டுச் செயற்றிட்டத்தின் அனைத்து எதிர்கால உட்பாய்ச்சல்களையும் வெளிப்பாய்ச்சல்களையும் கழிவீடு செய்வதன் அவசியத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

b) "தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV) என்பது முதலீட்டின் அளவைக் குறிக்கும் ஒரு குறிகாட்டி, அதேவேளை உள்ளார்ந்த திரும்பல் விகிதம் (IRR) என்பது முதலீட்டின் வினைத்திறன் மற்றும் தரம் அல்லது முதலீட்டின் விளைவின் குறிகாட்டியாகும்". NPV மற்றும் IRR இன் பலம் மற்றும் பலவீனங்களைக் குறிப்பிட்டு இக்கூற்றை விளக்குக. (08 புள்ளிகள்)

c) NPV மற்றும் கழிவீட்டு விகிதம் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினை வரைபட ரீதியாக விளக்குக. உமது வரைபடத்தில் வருமான செலவு சமப்படும் புள்ளியை (break-even point) தெளிவாகக் குறிப்பிட்டு, ஒரு தனியார் துறை முதலீட்டாளர் வியாபாரத்தைத் திட்டமிடுவதில் வருமான செலவு சமப்படும் புள்ளியின் முக்கியத்துவத்தை விளக்குக. (08 புள்ளிகள்)

5. a) "ஒரு புதிய முதலீட்டுச் செயற்றிட்டத்தை மதிப்பிடும் கட்டத்தில் விரிவான செலவு-நன்மை பகுப்பாய்வில் சமூக தாக்க மதிப்பீடு (SIA) மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) ஆகியன அத்தியாவசிய பகுப்பாய்வுகள் ஆகும்". இலங்கையின் அரசியல் மற்றும் சமூக பொருளாதார பின்னணியைக் கருத்திற் கொண்டு இக்கூற்றை விளக்குக (10 புள்ளிகள்)

b) சந்தைப்படுத்த முடியாத பொருட்கள் மற்றும் சேவைகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் நிழல் விலையிடல் நுட்பங்கள் செயற்றிட்ட மதிப்பீடு செயற்பாட்டில் மாற்று மதிப்பீட்டு செயல் முறையை வழங்கக்கூடும்". இக் கூற்றை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடையை நியாயப்படுத்த இலங்கையிலிருந்து பொருத்தமான உதாரணங்களை வழங்கவும். (10 புள்ளிகள்)

6. a) ஒரு முடிவடைந்த செயற்றிட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக உங்களை நியமித்திருப்பதாக கருதுக. முடிக்கப்பட்ட செயற்றிட்டம்/திட்டத்தைப் பயன்படுத்தி தாக்க மதிப்பீட்டின் பகுப்பாய்வு வகைகளை விளக்குக. (12 புள்ளிகள்)

b) 'பெண்களை வலுவூட்டும் நுண்கடன் செயற்றிட்டத்தில்' தாக்க மதிப்பீட்டை நடத்துவதற்கு நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் எனக் கருதுக. பெண்களுக்கான வலுவூட்டலை மதிப்பிடுவதற்கு பயனுள்ள தகுதிவிதிகளை விளக்குக. (8 புள்ளிகள்)